## முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்

## M.C.O.P.No.269/2014

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | .. | 2 |
| பெயர் | .. | இந்திர பாண்டியன் |
| தகப்பனார் / கணவர் | .. | சுப்பிரமணி |
| வயது | .. | 46 |
| தொழில் | .. | தலைமை காவலர் |
| கிராமம் | .. | தூசி |
| தாலுக்கா | .. | வெம்பாக்கம் |

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் நாள் செவ்வாய்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

நான் தற்போது தூசி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரப்பட்டதன் பேரில் சாட்சியம் அளிக்க உள்ளேன். தூசி காவல் நிலைய குற்ற 07/2014, பிரிவுகள் 279, 337 இதச ன்படி மற்றும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதே சம்பவம் குறித்து தூசி காவல் நிலைய குற்ற 343/2014, பிரிவுகள் 279, 337 இதச ன்படி மற்றும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இரண்டு வழக்கு கோப்புகளும் காவல் நிலையத்தில் தேடப்பட்டது. மேற்படி கோப்புகள் போதிய கவனத்துடன் தேடப்பட்டது, கிடைக்கவில்லை. அதற்கான கடிதம் கொடுத்துள்ளேன். மேற்படி நான் வழங்கிய கடிதம் ம.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் காவல் நிலையத்தில் பராமரிக்கப்படும் முதல் தகவல் அறிக்கை பதிவேட்டில் மேற்படி இரண்டு குற்ற எண் வழக்குகளும் 468 (ii) ன்படி உரிய நேரத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யாததால் மேற்படி வழக்குகள் 20.06.2016 அன்று முடிக்கப்பட்டுள்ளன. அதன்

Cr.M.P.No.3737/2016, Dated. 20.06.2016 மற்றும் Cr.M.P.No.3767/2016, Dated. 20.06.2016 தேதியில் நீதிமன்றம் மேற்படி வழக்குகளை முடித்துள்ளது.

**குறுக்கு விசாரணை:**

இரண்டு முதல் தகவல் அறிக்கைகளும் 2014 ஆம் ஆண்டு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இரண்டு வழக்குகளும் கால வரம்பு முடிந்ததால் இரண்டு வருடங்கள் கழித்து நீதிமன்றம் முடித்துள்ளது. மேற்படி நீதிமன்றம் உத்தரவு எதுவும் காவல் நிலையத்தில் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி இரண்டு முதல் தகவல் அறிக்கைகளும் இறுதி அறிக்கை உரிய நேரத்தில் தாக்கல் செய்யாததால் முடித்து வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒரே சம்பவம் என்பதால் விசாரணை செய்திருந்தால் யார் குற்றவாளி என்று முடிவு செய்திருக்க முடியும் என்றால் சரிதான்.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**